விலை சதம் 25

# காந்தீயம்

நம் ஆத்மிக சாதனையை நம் வீட்டிலே சோதித்துப் பார்க்க முடியாது. சமூக சேவைக் களத்திலேதான் சோதித்துப்பார்க்கமுடியும்.

— வினோபா

மலர் 14 | காந்தி நிலையம்- உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 107) 1976 நவம்பர்—டிசெம்பர் | இதழ் 2

# கிராமக் குடியரசு

கணக்கற்ற கிராமப் பஞ்சாயத்துக்களைக் கொண்ட ஒரு குடியரசே உண்மையான ஜனநாயக அமைப்பு என்று காந்திஜி கூறினர். கிராமக் குடியரசின் அமைப்பு எத்தகையதாக இருக்கும் என்று அவர் காணும் கற்பனை கிராமத்தைப் பற்றி இங்கு காந்திஜி விளக்குகிறார்.

சுதந்திரம் அடியிலிருந்து ஆரம்பமாக வேண்டும். இதன்படி ஒவ்வொரு கிராமமும் முழு அதிகாரங்களுடைய ஒருகுடியரசாக அல்லது பஞ்சாயத்தாக இருக்கும். அதாவது ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றதாகவும், உலகமே எதிர்த்து நின்றாலும்கூடத் தன் அலுவல்களைத் தானே கவனித்துக்கொண்டு பாதுகாத்துக்கொள்ளக்கூடிய திறமையுள்ளதாக இருக்கவேண்டும். வெளியிலிருந்து ஏதாவது தாக்குதல் ஏற்பட்டால் அதிலிருந்து தன்னைப்பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் உயிரையே விடுவதற்கும் தயார்என்ற முறையில் கிராமம் பயிற்சி பெற்றிருக்கும்.

## இலட்சிய கிராமம்

இலட்சியகிராமம் என்பது எல்லா சுகாதார வசதிகளுக்கும் ஏற்றதாக இருக்கும். தேவைக்குத் தக்கவாறும், யாவரும் உபயோகிக்கக் கூடியதாகவும் கிணறுகள் இருக்கும். பொதுவாக கோவில்கள், கூடிப்பேசுமிடம், கால்நடைகளுக்குமேய்ச்சல்பூமி, கூட்டுறவுப் பால்பண்ணை, கைத்தொழில் கல்வியை முக்கியமாக கொண்ட ஆரம்ப, செகண்டரிப் பள்ளிகள் ஆகியவையும் இருக்கும். கிராமத்திற்கு வேண்டிய தானியங்கள், காய்கறிகள், கதர் ஆகியவைகளையும் அக்கிராமமே உற்பத்தி செய்து கொள்ளும்.

## கிராமக்குடியரசின் தூண்கள்

அத்தகைய பஞ்சாயத்து ராஜ்ஜியத்தில்சமூக, பொருளாதர, அரசியல், மதத்துறைகள் யாவற்றிலுமே, நாட்டிலுள்ள மிகுந்த எளியவர்களுக்கும், ஒரே விதமான சமதத்துவம் இருக்கும். உழைப்பிற்கே அதிகமா மதிப்பு இருக்கும். பிரசைகள் நாணயமான வழியில் வாழ்க்கைக்கு வேண்டியதைச் சாம்பாதிப்பார்கள். சுதேசியே வாழ்க்கையின் தருமமாக இருக்கும். பிரஜைகள் அகிம்சை வழியில் சத்தியத்தைக் காப்



பாற்றவும், அவசிய மேற்பட்டால் அதற்காகத் தமது உயிர்களையே கொடுக்கவும் தயாராயிருப்பார்கள். இவை கிராமங்களின் குடியரசைத் தாங்கி நிற்கும் தூண்களாகும்.

## தன்னிறைவே அடிப்படை

கிராமங்கள் முக்கியமாக தம் உபயோகத்திற்கென்றே உற்பத்தி செய்து தன்னிறைவு பெற்றவைகளாய் இருப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். கிராமக்கைத்தொழில்களின் இந்தத்தன்மையை நாம் காப்பாற்றினால் கிராமங்கள் தம்மால் முடிந்த நவீனயந்திரங்களையும் கருவிகளையும்உபயோகிப்பதற்குக்கூட ஆட்சேபனை இராது. மற்றவர்களை சுரண்டுவதற்காக இவற்றை உபயோகிக்க கூடாது. மனிதன் தேவைகளை எல்லாம் யந்திரங்கள் சப்ளை செய்யலாம் என்று வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும் அப்போது குறிப்பிட்டசில இடங்களில் தான் உற்பத்தி குவிக்கப்பட்டிருக்கும். விநியோகத்தைச் சீர்படுத்துவதற்குச் சுற்றிவளைத்து போகவேண்டியிருக்கும். ஆனால் பொருள்கள் தேவைப்படும் பிரதேசங்களிலேயே உற்பத்தி விநியோகம் ஆகிய இரண்டுமே இருந்தால், அது தானகவே சீர்பட்டு விடும். மோசடிக்கு அதிக வாய்ப்பு இருக்காது. அந்தந்த இடங்களிலேயே உற்பத்தியும் விநியோகமும் இருக்கும்போது எப்படியானாலும் உற்பத்தியை பெருக்கிக் கொண்டேயிருக்க வேண்டுமென்ற ஆசை மறைந்து விடுகிறது. இன்றைய பொருளாதார முறையிலுள்ள ஓயாத சங்கடங்களும் பிரச்சனைகளும் தீர்ந்து விடும். ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டியவற்றை உற்பத்தி செய்து உபயோகித்துக் கொள்வதுடன் நகரங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தன்னுடைய பங்காக ஒருகுறிப்பிட்ட விகிதாசரப்படி மேற்கொண்டும் உற்பத்தி செய்ய வேண்டும்.

## உண்மையான திட்டம்

ஒருதேசத்தின் சக்திவாய்ந்த ஆள் பலத்தை புறக்கணித்து விட்டு மூலப்பொருள்களை மட்டும் பயன் படுத்திக் கொள்ளும் எந்தத்திட்டமும் சரியானதல்ல. மனிதசமுதாயத்தை முன்னேற்றுவதற்கும் அது உதவி செய்யாது. இந்தியாவிலுள்ள ஆள்பலம் பூராவையும் திறம்படப் பயன் படுத்திக் கொள்ளுவது இந்தியாவிலுள்ள மூலப் பொருள்களை வெளியே அனுப்பி பிறகு, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்

3 ஆம் பக்கம் பார்க்கவும்

# காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]

தொலை பேசி: 254

(கிளிநொச்சி)

காந்தி ஆண்டு 107

1976 நவம்பர், டிசெம்பர்


## ஒருவனாய் உலகேத்த நின்ற நாள்

உலகம் ஒரு உலகம். ஒரு என்றால் ஒருமையாய் நிற்கும் உலகம். உலகம் என்பதற்கு மாறான சொல் ஆணவம் என்பதாகும். ஆணவம் என்பது அணுவாய் நிற்கும் இயல்பு. முழுமையை மறந்து, தான் முழுமையின் ஒரு பகுதியை மறந்து, தன் அணுத்தன்மையை உயர்த்தி அழுத்திக் காட்டும் இயல்பே ஆணவம். இந்த இறுமாப்பு உயர, உயரப் பிளவு சக்திகூடி, அமைப்பிற்குக் கேடு வரும். உலகிற்கு அழிவு உண்டாகும்.

மகாத்மா காந்தியை அவதார புருடர் என்று சொல்வதை நாம் விட்டு விடல் வேண்டும். அவதாரம் என்றால் கீழ் இறங்கியதென்று பொருள்படும். அவர் மனித குலத்தின் உயர் பண்பு எல்லாம் திரண்டு உருவாய ஓர் தெய்வீக சக்தி. அதனால்தான் அவரிடம் இந்த அணுத்தன்மை, பாகுபாட்டுத் தன்மை, பிளவுத்தன்மை மிக மிகக் குறைவாக இருந்தது. அவரிடம் காணப்பட்ட சிறு அணுத்தன்மையும், குறித்த ஒரு காலத்திற்கு ஒரு தேசப் பகுதிக்கு அக்கால மக்களோடு சேர்ந்து பணி செய்வதன் பொருட்டு இறைவன் அளித்த சக்தியேயாம்.

இந்த ஆணவம், அணுத்தன்மை, பிளவுத்தன்மை, பல காரணங்களின் அடிப்படையில் எழலாம். தன் சுய அபிமானம், குடும்ப, கிராம, மொழி, நாட்டு அபிமானங்களால் ஏற்படலாம். சமய, கொள்கை முறை, அரசியல் நோக்கு அபிமானங்களாலும் ஏற்படலாம். இவை எப்படி எழுந்தாலும் எல்லாம் அணுத்தன்மையே; ஆணவங்களே. நாம் மதாபிமானம் தேசாபிமானம் என்று கருதுவதெல்லாம் தடித்த ஆணவங்களே. அணு தடித்த பாரிய அணுவாயிருக்கலாம். ஆயின் ஆணவமும் அதற்கேற்பப் பாரியதாயிருக்கும். மகாத்மாவின் சத்திய வாழ்வு இந்த ஆணவத்தை நீக்கின வாழ்வாகும்.

1947 ஆம் ஆண்டு மாச் மாதத்தில் புதுதில்லியில் ஆசிய நாடுகளின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. ஆசியநாடுகள் அங்கு கூடின. மகாத்மா அங்கு வரவழைக்கப்பட்டார். ஜவஹர்லால்நேரு மிக மன்றாட்டமாகக் கேட்டதாலேயே மகாத்மா அங்கு சென்றார். அப்பொழுது இந்தியா சுதந்திரம் பெறவில்லை. அந்த மகாநாட்டில் ஆசியஅபிமான மனப்பான்மை தலை ஓங்கி நின்றது. அண்மையில் நடந்த அணிசாரா நாடுகளின் கூட்டத்தைப் போலவே அதுவும் மிக உற்சாகத்துடன் நடைபெற்றது. ஆசிய எண்ணம் தலை ஓங்கினால் அது இயற்கையாக ஐரோப்பாவையே நோக்கிச் செல்லும். 1947 இல் உள்ள நிலைமையை மகாத்மா நன்கு அறிந்திருந்தார். பிரதேசவாரியாக ஒரு கூட்டம், மாநாடு நடக்கும் பொழுது அது மற்றைப் பிரதேசங்களுக்கு எதிராக இயக்கம் பெறுவது இயற்கையே. அன்றியும்; மனிதனின் எந்த மாநாடும் மனிதகுல ஒற்றுமையை அழுத்திக்காட்டாது வேற்றுமையை, பகைமையைச் சுட்டிக் காட்டினாலும் அது பாரிய தடித்த ஆணவமேயாகும். ஆசியா, ஆபிரிக்கா என்று பிரித்தாலும் மூன்றாம் உலகு என்று பிரித்தாலும் அதுவும் ஆணவ வழிப்போக்கே. இதை மகாத்மா 1947 இலேயே உணர்ந்திருந்தார். அதை மனதில் இருத்தி அன்று அவர் பேசினார். அவர் பேசியதாவது; "இந்த உலகம் ஒரு உலகமாயில்லாத நிலையில் நான் இந்த உலகில் இருக்க விரும்பவில்லை. என் வாழ்நாளிலேயே இக்கனவு நனவாதலைக்காண ஒரு உலகு காண நான் மிகவும் விரும்புகிறேன்." அவர் மேலும் தொடர்ந்து சொன்னதாவது; "ஆசிய பிரதிநிதிகளை ஒன்று சேர்த்தது யாது? சென்ற காலத்தில் தம்மைக்கறந்த மேலை நாட்டவர்மீது பழிவாங்க வேண்டுமென்ற எண்ணமா, இவர்களை ஒன்று சேர்த்தது? அகிம்சைமுறையால் சுதந்தரம் பெற்ற நாடு மற்றைய நாடுகளை அமுக்க, அழிக்க முயல்வதை என்னால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை." என்று அவர் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்; "மேலைநாடுகட்கு நீங்கள் யாதாயினும் செய்தி கூற வேண்டுமெனில் அது அன்பும் உண்மையும் கலந்த செய்தியாயிருக்க வேண்டும். மக்களாட்சி பெற்று மக்கள் விழிப்புப் பெற்ற நிலையில் இந்தச் செய்தியையே மீள நாம் வற்புறுத்திக் கூற வேண்டும். மேலை நாட்டவர் நம்மைக் கறந்துவிட்டார்கள் என்பதற்காக அவர் மீது பகைகொண்டு பழிவாங்கி அவரை நாம் வெல்ல நினைத்தல் ஆகாது. அன்பால் தான் வெல்லலாம். கீழை நாட்டுச் சான்றோர் நமக்கு விட்டுச் சென்ற அன்பு சத்தியம் ஆகிய செல்வங்களை நாம் மறந்து விடக்கூடாது. உங்கள் மூளையை மட்டுமன்றி நெஞ்சங்களையும் பிணைத்து இப்பிரச்சினையை ஆராய வேண்டும்." என்று கூறினார்.

அனைத்துலக மாநாடுகள் மகாத்மாவின் குரலை மறந்து விட்டன. அன்பு உண்மை என்ற அடிப்படைகள் மறைந்து விட்டன. ஆணவம் பழிவாங்கல் என்ற அழிசக்திகளே உருவாகி உள்ளன. உலகம் ஒருப்பட உருப்பட அன்பும் உண்மையும் தான் புரட்சி மார்க்கங்கள். இம்சையும் போரும், எதிர்ப்பும் பழைய விலங்கு வழி வந்த வரலாற்று மார்க்கங்கள்.

—இ. இ.

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

# காந்தி-ஒரு சத்தியாக்கிரகி

மகான்களின் செய்கைகளும் போதனைகளும் பேரன்பிலிருந்தும் உண்மையிலிருந்தும் ஊற்றெடுக்கின்றன. காந்தியடிகளின் சத்தியாக்கிரக தத்துவமும் இத்தகையதே. இத்தத்துவம் சத்தியம் அஹிம்சை ஆகிய குணங்களால் அரண் செய்யப்பட்டுள்ளது. இவையிரண்டும் ஆன்ம குணங்கள். குழப்பம் மலிந்த இவ்வுலகில் ஆறுதல் தரக்கூடிய ஒரு செய்தி என்னவெனில் மனிதர் ஒவ்வொருவரும் மனிதத்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டுமென முயற்சிப்பது. செய்யத்தக்கது எது? செய்யத்தகாதது எது? என்பதனைத் தீர்மானிப்பதில் சாதாரண மக்கள் பலமுறை தவறிவிடுகிறார்கள்.ஏன் ஞானிகள்கூட இத்தவற்றினை இழைக்கிறார்கள். ''கிம் கர்ம கிம் அகர் மேதி கவயோ அப்யத்ர மோஹிதா'' (கர்மம் எது? அகர்மம் எது? என்பதில் ஞானிகள் கூட மயக்கமடைகிறார்கள்)என்பது கீதாசாரியன் வாக்கு.சாதாரண மக்கள் தமது தவறை மறந்து விடுகிறார்கள். ஆனால் ஞானிகள் ஆன்ம பரிசோதனை செய்து தவறிலிருந்து மீள்வதுடன் உலகுக்கும் வழி காட்டுகிறார்கள். காந்தி மகாத்மாவின் சத்திய சோதனையிலிருந்து பிறந்தது சத்தியாக்கிரஹ தத்துவம். அவர் இத்தத்துவத்தை வியக்கத்தக்க முறையில் சமுதாய விடுதலைக்கும் அரசியல் விடுதலைக்கும் ஒரு கருவியாகக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார். அரசியல் வாழ்வில் எந்தச் சந்தர்ப்பத்திலும் சத்தியம் தவறக்கூடாது, பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாது என்கிற அவரது சித்தாந்தம் இவ்வுலகிற்குப் புதியது எனினும் இதை விடச் சிறந்த வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சத்தியம் என்றால் என்ன? சத்தியம் என்றால் இதுதான் என வரைவிலக்கணம் கூறமுடியாது. ''உண்மை என்ற பொருளிலும் ஸத் (சத்தியம்) என்ற சொல் வழங்கப்படுகிறது. மங்கள கர்மங்களும் ஸத் கர்மங்களே. கேள்வி தவம் தானம் என்பவற்றிலும் இறைவன் பொருட்டுச் செய்யப்படும் கருமத்திலும் ஸத் என்பது நிலைத்துள்ளது'' எனக் கீதை விளக்கம் தருகிறது. ''நான் இறைவனை வழிபடுவது சத்திய வடிவிலேயாம்'' என்கிறார் காந்தியடிகள். இறைவன் மீது எல்லையற்ற நம்பிக்கை கொண்டிருக்கும் காந்தியடிகள் மனிதன் சத்தியத்தைக் கடைப்பிடிக்கிறான் என்றால் இறைவனின் திருவுள்ளப்படி நடக்கிறான் என்று கருதுகிறார். சத்தியத்தைப் பூரணமாகத் தரிசிப்பது என்றால் அது தன்னைத்தான் அறிந்து கொள்வதாகும், கடவுளையும் கண்டு கொள்வதாகும், சத்தியத்திலிருந்து பிறழா நடத்தையுடையவன் சத்தியாக்கிரகி.

காந்தி அஹிம்சை என்ற சொல்லுக்கு, ஓர் உயிருக்கும் துன்பஞ் செய்யாதிருத்தல் என்ற எதிர்மறைப் பொருளைமட்டுமன்றி தன்னை எதிர்ப்பவனிடத்தும் அன்பு பாராட்டல் என்ற உடன்பாட்டுப் பொருளையும் கொள்கிறார். ''ஒரு சத்தியாக்கிரகி தன்னைத் தாக்குபவனிடத்தில் அன்பு பாராட்டுபவனாகவும் தன் எதிரியின் நலனுக்குப் பிரார்த்திப்பவனாகவும் இருக்க வேண்டும்'' என்பது அவர் வாக்கு. இக் கருத்தில் அஹிம்சை என்ற சொல்லே அன்பின் பூரண வடிவத்தை உணர்த்துகிறது. நம்மைச் சேர்ந்தவர்களிடம் அன்புடையவராயிருத்தல் எளிது. தன்னைத் தாக்குபவனிடத்தும் அன்பைச் சொரிபவனே சத்தியாக்கிரகி.

உலகை அழிவுப் பாதையிலிருந்து மீட்டுச் செல்லவும் உலகில் சமாதானத்தையும் சாந்தியையும் உண்டாக்கவும் சத்தியாக்கிரகியால்தான் முடியும். ''இச் சத்தியமார்க்கம் கத்தியின் விளிம்பைப் போல் நேரியதாயும் குறுகியதாயும் கூரியதாயும் இருப்பினும் அதுவே எனக்கு விரைவில் செல்லக்கூடிய எளிதான வழியாயும் இருந்துவந்திருக்கிறது'' என்பது மகாத்மாவின் அபிப்பிராயமாகும்.

சத்தியாக்கிரகியின் மனதில் பகையில்லை. இதனால் அவனுக்குப் பகைவருமில்லை. அவனுக்குத் தோல்வியில்லை ஆனால் அவன் பிறரைத் தோற்கடிப்பதுமில்லை. அவன் எதையும் வெற்றியாகவும் கருதுவதில்லை. சத்தியாக்கிரகியின் வெற்றியென்பது மனிதகுலத்தின் வெற்றியே!

— வ. சிவசுப்பிரமணியம்
மட்டக்களப்பு

## பண்ணிசையில் முதலிடம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, யாழ். இந்துகல்லூரியில் நடத்திய பண்ணிசைப் போட்டியில், அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடத்தி வரும் பண்ணிசை வகுப்பில் பயிற்சி பெற்ற செல்வி. நல்லையா - சண்முகப் பிரியா மேற்பிரிவில் முதலாம் இடத்தையும் கீழ்ப்பிரிவில் செல்வி. செல்வராசா-யசோதா இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

## அன்பளிப்பு

கொள்ளுப்பிட்டி, 28 ஆவது ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி. E. இராசரத்தினம் அவர்கள் இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களுக்கு 100 ரூபா அன்பளிப்புச் செய்துள்ளார்.

## விடயதானங்கள் வரவேற்கப்படுகின்றன

சத்தியம், அகிம்சை, தீண்டாமை மதுவிலக்கு முதலிய காந்திய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கதை, கவிதை, கட்டுரைகள் காந்தீயத்தில் பிரசுரமாவதற்கு வரவேற்கப்படுகின்றன.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களாக பெரும் விலைகொடுத்து அவற்றை மீண்டும் வாங்குவதற்குப் பதிலாக, மூலப்பொருள்களை இங்குள்ள எண்ணற்ற கிராமங்களிலேயே உபயோகிப்பது தான் உண்மையான திட்டமிடுதலாகும்.

காந்தி நூல் — 8

காந்தீயம்
சந்தா விபரம்

| | |
|---|---|
| ஓர் ஆண்டு | ரூ 4 00 |
| அரை ஆண்டு | ரூ 2 00 |
| தனிப் பிரதி | 25 சதம் |

நிர்வாகி
காந்தி நிலையம்
உருத்திரபுரம்

# சுதேசி வாழ்க்கை முறை

(காகா கலேல்கர்)

பெற்றோர்கள் மூலம் நமக்கு இந்த உடல் கிடைத்திருக்கிறது. இந்த உடலைக் கொண்டுதான் வாழ்க்கைப் பயணத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இந்த உடல் நல்லதாக இருந்தாலும்சரி, பலவீனமாக இருந்தாலும் சரி, நோய்வாய்ப்பட்டிருந்தாலும்சரி அல்லது வேறெவ்வாறிருந்தாலும் அது நமது உடல் தானே என்று நாம் கருதுகிறோம். எனவே அதற்குப் பணிவிடை செய்து சீர்திருத்தி நாம் வாழ்வதற்கான ஆராய்ச்சியை நடத்துகின்றோம். நம் உடலைக் கை விட்டுவிட முடியாது. எனவே அதைப் பேணி வளர்த்து, அதன் மூலம் அழிவற்ற ஆற்றலைக் காட்டுவது நமது சுதர்மமாகும். சுதேசி தர்மமும் இங்குதான் தொடங்குகிறது: அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும் இவ்வுடல் இருக்கிறது.

நாம் பெற்றிருக்கும் உடலை நிராகரித்து விட்டு உயிர் வாழ முடியாது. நம்மைப் பெற்ற தாய் தந்தையருடன் நமக்குரிய உறவையும் நாம் மறுக்க முடியாது. எனவே பெற்றோருக்கு சேவை செய்ய வேண்டியிருக்கிறது. உரிய காலத்தில் நமது ஆற்றலுக்கேற்ப பெற்றோர்களுக்கு பணிவிடை செய்வது இயற்கையாகவே சுதர்மமாகி விடுகிறது. அதே போன்ற நமக்கு அண்டை அயலாரிடமும் தொடர்பு கொண்டு அவர்களது சேவைகளைப் பெற்றுக் கொள்வதுடன் அவர்களுக்கு நாம் பணிவிடை செய்வதும் தவிர்க்க முடியாதது; அவசியமானது.

எந்த மொழியில் நாம் பேசுகின்றோமோ, சமுதாயத்தில் எந்த மொழியின் உதவியால் தொடர்பு கொள்ளுகிறோமோ அதுதான் நமது மொழியாக ஆகிறது. எனவே அதன் மூலம் பயன் பெற்று சமுதாயத்திற்கும் சேவை செய்வது நமது தவிர்க்க முடியாத கடமையாகும். எந்த சமுதாயத்தில் நாம் வாழ்கிறோமோ, அதற்கும் நாம் சேவை செய்ய வேண்டும் இதைத்தான் நாம் சுதேசி தர்மம் எனக் கூறுகிறோம். இதே போன்று தவிர்க்க முடியாத காரணங்களால் எந்த தனி நபரோ, கூட்டமோ வேறு இடத்திற்குச் சென்று வாழ வேண்டி ஏற்பட்டால் அப் புதிய இடத்திற்கு ஏற்பவாழ்வதுதான் சுதேசி தர்மமாக அமைய வேண்டும். சுதேசிக் கொள்கையில் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மாற்றம் செய்து கொள்ள முழு வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. எனவே அதைப் பற்றி கடமை அறிவுடன் சிந்தனை, மனனம், நிர்ணயம் செய்வதற்கு தார்மீக, சமுதாய நலன் கண்ணோட்டத்தில் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகி விடுகின்றது. இதில் விருப்பு வெறுப்புக்கு இடமே இல்லை. சுயநலம், பேராசை, ஒரு தரப்பு சார்புக்கும் இடமில்லை. மேலே கூறிய விரிவான கண்ணோக்கில் சுதேசி தர்மம் என்பது எல்லோருக்கும் எல்லா சமுதாயங்களுக்கும் கலர்சாரங்களுக்கும் பொருந்துவதாகும். இதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை இயற்கையான சுதர்மம் என்று கூறுவோம்.

மனித வாழ்க்கை, மனிதப் பண்பாடு ஆகியவை முன்னேறிச் செல்லச் செல்ல சுதேசியின் கருத்தில் மேலும் ஆழ்ந்து செல்ல வேண்டியிருக்கிறது. இந்த சுதேசி சனாதன இந்து தர்மத்தை இஸ்லாம், யகூதி, கிறிஸ்தவம் போன்ற எல்லா மதங்களும் தமதாக்கிக் கொண்டுள்ளன. இந்த பரந்த தன்மைதான் சுதேசி தர்மத்தின் சிறப்பாகும். எல்லாக் காலங்களுக்கும், இடங்களுக்கும் எல்லோருக்கும் பணிவிடை செய்வது சுதேசிக் கொள்கையாகும். ஆனால் இதிலும் வரையறை இருக்கிறது. அத்துடன் எல்லாருக்கும் நன்மை பயப்பதாகவும் இது இருக்கிறது. எனவே எல்லாரும் உலகின் பல பகுதிகளிலும் இருப்பவர்களும் சுதேசிக் கொள்கையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்து பிரசாரமும் செய்ய வேண்டும்.

சுதேசியைப் பற்றி விளக்குவதற்கு ஒரு உதாரணம் கூறுவோம், சுதேசி என்பது விரிந்து கொண்டே செல்லக் கூடிய வட்டம். இந்த வட்டத்தின் ஆரம்(RADIUS) அதிகரித்துச் செல்லச் செல்ல வட்டமும் விரிந்து கொண்டே செல்லும். எனவே இந்தச் சுதேசி வட்டமும் விரிந்து கொண்டு செல்லச் செல்ல உலகம் முழுவதையும் அது தன்னுள் அடக்கி விடும். என்னுடைய நிலை, என் உடலை, பெற்றோரை உற்றார் உறவினரை, மொழியை, சமுதாயத்தை உதாசீனம் செய்யாதே என்று என்னுடைய சுதேசி என்னிடம் கூறுகின்றது-அந்த நிலையத்தின் ஆற்றல் மீது ஆரம் கட்டாயம் வளரும் என்பதை அறிந்து கொள். தொடர்ந்து முறையாக வளரும் என்பதை அறிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் அதன் வளர்ச்சியை ஏற்று வணங்குவாயாக; ஆனால் நீ இருக்கும் நிலையை மறந்து விடாதே என்று கூறுகிறது. இது போன்ற சுதேசிக் கொள்கையைக் குறுகியது,, சுயநலமானது, ஆசை பிடித்தது என்று கூறி கை விட வேண்டியதில்லை. எந்த கணத்திலாவது ஏதாவதொன்றின் மீது துவேஷம் ஏற்பட்டால் யார் மீது மனத்தால் வெறுப்பு ஏற்பட்டதோ அவன் வரை சுதேசிக் கொள்கையின் ஆரத்தை வளர்த்து அவனையும் அந்த சுதேசி என்னும் வட்டத்துக்குள் கொண்டு வா என்று சுதேசி கூறும். சுதேசி தொடர்ந்து வளர்ந்து செல்லும் இயல்புடையது. அதை குறுகிய மனப்பான்மை அல்லது சுயநலம் என்று யாரல் கூற முடியும்? சுதேசிக் கற்பனையே விஞ்ஞான ரீதியானது, எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொள்வது. இதை ஏற்றுக் கொள்ளாமல் வேறு வழியே இல்லை. எனவே சுதேசியே உயிரோட்டமுள்ள வாழ்க்கை தர்மமாகும்.

## தமிழ் நாடு

### சர்வோதய சங்கத்தின் அபாரசாதனை

சுமார் 2100 ஊழியர்களைக் கொண்ட தமிழ் நாடு சர்வோதய சங்கம் தமிழ்நாடெங்கும் பரவலாக உள்ள தனது 350 கிளைகள் மூலம் சுமார் ஏழரைக் கோடி ரூபா பெறுமானமுள்ள கதர், கிராமப் பாருட்களை வருடா வருடம் உற்பத்தி செய்து வருகிறது. கதர் கமிஷன் அளிக்கும் உதவியில் சுமார் 23 சதவிகிதத்தை தமிழ்நாடு மட்டும் பெற்று இந்தியாவிலேயே கதர் உற்பத்தியில் முதலிடம் வகித்து வருகிறது.

தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் பதினெட்டாவது ஆண்டுவிழா அண்மையில் திருப்பூருக்கு அருகிலுள்ள படியூரில் சிறப்பாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு — குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Registereb at a NewsPaper in Sri lanka